# Annual Reports (2018-2023)

**Criterion : VI – Governance, Leadership and Management**
**Metric : 6.3 Faculty Empowerment Strategies**
**Year : 2018 - 2023**



## Annual reports highlighting the programmes undertaken by the teachers

### எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்.

### ஆண்டு விழா 2022 – 2023

எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் 21.02.2023 அன்று கல்லூரி ஆண்டுவிழா கல்லூரி முதல்வர் முனைவர்.தே.லெட்சுமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக, புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி, முதல்வர் முனைவர் பி.புவனேஸ்வரி அவர்கள் கலந்துகொண்டு. மாணவிகள் எந்தெந்த படிப்பினை படித்தால் எவ்வாறு நம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையினை அடையலாம் என எழுச்சியூட்டும் வகையில் உரையாற்றினார். மேலும் மாணவிகள் பயன்பெறும் வகையில் கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழா உதவிப்பேராசிரியர் திரு.ந.முகுந்தன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. பேரவைப் பொறுப்பாசிரியர் மற்றும் கணிதத்துறை தலைவர் முனைவர். ஏசா.இராமச்சந்திரன் அவர்கள் கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்தார். பல்கலைக்கழகத்தில் அதிக மதிப்பெண் பெற்ற 270 மாணவிகளுக்கு முனைவர்.க.அண்ணாதுரை உதவிப்பேராசிரியர் அவர் பெயர்பட்டியலை வாசிக்க சிறப்பு விருந்தினர் பரிசுகள் வழங்கி விழாவினை சிறப்பித்தார். இறுதியாக பேரவைத்தலைவி செல்வி.ஜெ.ரிகானா பாத்திமா வேதியியல் மூன்றாமாண்டு ஆங்கிலவழி அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவடைந்தது.

### கல்லூரி பொது நூலகம்

1. ரூபாய் 1,99,917-க்கு புத்தகங்கள் வாங்கப்பட்டன.
2. NLISTமூலம் 6000 + Full Text ஆராய்ச்சி இதழ்களும் 5,90,000 மின் புத்தகங்களும் பெறப்படுகிறது.
3. நூலகத்திற்கு 9 பருவ இதழ்களும் 3 செய்தித்தாள்களும் பெறப்படுகின்றது.
4. பல்கலைக்கழக செமஸ்டர் கேள்வித்தாள்கள், போட்டித் தேர்வுக்கான புத்தகங்கள், கல்லூரி Projects & Publications ஆகியவை நூலகத்தில் உள்ள Special Collections ஆகும்.
5. 13 துறை நூலகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.
6. நேரிடையாக நூலகத்திற்கு 15,106 பயனாளர்கள் வருகை புரிந்துள்ளார்கள்.
7. Online மூலமாக 21196 பயனாளர்கள் Library blog-ஐ பயன்படுத்தி உள்ளார்கள்.
8. 2533 புத்தகங்கள் பயனாளர்களுக்கு இரவல் வழங்கப்பட்டுள்ளன.
9. நூலகத்தில் 22 கணினிகள், ஒரு photocopier, 2 Brother Printers ஒரு Barcode Printer, 3 Barcode Scaners ஒரு Scanner & 1.5. டன் AC உள்ளது. 13 கணினிகள் LAN Connection-ல் உள்ளன. 6 கணினிகள் Wifi Internet வசதியும், Digital Library-ல் 10 கணினிகள் Landline Internet Connec tion-ம் உள்ளது.
10. 724 பயனாளிகள் நூலகத்திலுள்ள Digital Library & இதர கணினிகளைப் பயன்படுத்தி உள்ளனர்.
11. நூலகத்தில் Document Delivery Service, Notice board Service, New arrivals display Service, Research Assistance Service, Referral Service, Internet Service, Career Guidance Service ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.
12. நூலகத்திற்கென பிரத்யேகமாக இரண்டு வலைதளங்கள் வணிகவியல் & வணிக நிர்வாகத்திற்கான Subject Gateway-ம் இயங்கிவருகின்றன.
13. நூலகத்தைக் கணினிமயமாக்குவதற்காக KOHA என்ற மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 3000 புத்தகங்கள் Barcode செய்யப்பட்டுள்ளன. அனைத்து புத்தகங்களும் KOHA -ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, OPAC 10 கணினிகளில் செயல்படுகிறது.
14. Automatic Gate Login System (In out Management System) சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
15. Air conditioned Digital Library-ஐ Rusa பதிவு நான் முதல்வன் பதிவு, PG Project work, போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தல், ஆதார் Linking & BBA Tally போன்ற பல காரணங்களுக்காக பயன்படுத்தி வருகின்றோம்.

**Criterion : VI – Governance, Leadership and Management**

**Metric : 6.3 Faculty Empowerment Strategies**

**Year : 2018 - 2023**



16. AppGeyser என்ற வலைதளம் மூலம் நூலக website-க்கு என ஒரு புதிய App உருவாக்கப்பட்டுள்ளது.
17. 25.8.2022 அன்று UG முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான Library orientation Program நடத்தப்பட்டது.
18. 6.10.2022 அன்று MVM Reads என்ற மாபெரும் வாசிப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
19. 17.10.2022 & 18.10.2022 ஆகிய இருநாட்களும் PG இறுதியாண்டு & M Phil மாணவியர்களுக்கான SDP - Internal Seminar on Information Literary skills நடத்தப்பட்டது.
20. 23.11.2022 அன்று free Online Resources for the Academic என்ற தலைப்பில் இன்டர்நேஷனல் செமினார் நடத்தப்பட்டது.
21. 10.01.2023 & 11.01.2023 ஆகிய இருநாட்கள் Using SPSS for Science Research என்ற தலைப்பில் PG இறுதியாண்டு M.Com., MA Econoics & PG முதலாண்டு M.Com, மாணவியர்களுக்கு Work shop நடத்தப்பட்டது.
22. 17.2.2023 அன்று CLAM 2023 (Central Library Association Meeting) Exploration & Utilization of NLIST E-Resources என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.
23. 27.2.2023 அன்று Exposure visit-ல் நூலகத்திற்கு 3 Batch-ல் வருகைபுரிந்து சுமார் 70+2, மாணவ மாணவியர்களுக்கு நூலகம் அறிவோம் என்று Orientation வழங்கப்பட்டது.
24. March 6 முதல் March 10, 2023 வரை Online Inter Collegiate Quiz FIRST Women in India என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. 3012 பேர் பங்கெடுத்துள்ளனர்.
25. March 8, 2023 அன்று அம்பிளிக்கை Rev. Jacob Memorial Christian College BLISC மாணவிகளுக்கு Library visit-com-orientation Program நடத்தப்பட்டது.

கல்லூரி நூலகர் :

1. Refresher Course in Library & Information Science at Pondichery University, Puducherry (1831, Jan 2023)
2. மூன்று விருதுகள் : Best Librarian Award from Tamilnadu Academic Library Association, Mr.R Venkataraman Outstanding Service Award from Madras Library Association, Dr.S.Srinivasan Memorial National Special Appreciation & Meritorious Service Award (Researchin LIS) from SALIS
3. ஆய்வு இதழ்களில் மூன்று கட்டுரைகள்
4. 34 book Chapters in Edited Books

## பட்டமளிப்பு விழா

22.09.2022 அன்று எமது கல்லூரியில் அனைத்து துறைகளிலும் 2019-2020 ஆம் கல்வியாண்டிற்கான பட்டப்படிப்பு. பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வியல் நிறைஞர் படிப்புகளை நிறைவு செய்த மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர். திரும்தி.தே.லட்சுமி அவர்கள் தலைமை ஏற்றார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர் முனைவர்.பி.பொன்முத்துராமலிங்கம் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை அவர்கள் கலந்து கொண்டு மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

23.09.2022 அன்று எமது கல்லூரியில் அனைத்து துறைகளிலும் 2020-2021 ஆம் கல்வியாண்டிற்கான பட்டப்படிப்பு. பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வியல் நிறைஞர் படிப்புகளை நிறைவு செய்த மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி.தே.லட்சுமி அவர்கள் தலைமை ஏற்றார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர் முனைவர்.M.தவமணி கிறிஸ்டோபர், முதல்வர் அமெரிக்கன் கல்லூரி, மதுரை அவர்கள் கலந்து கொண்டு மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

**Criterion : VI – Governance, Leadership and Management**

**Metric : 6.3 Faculty Empowerment Strategies**

**Year : 2018 - 2023**

In this institution around 150 teachers have participated 374 programmes for the past five years and enhanced their teaching calibre. Apart from teaching, the teachers regularly participate in Faculty Development Programme, Orientation Programme, Refresher Course, In-service Training Programme, SWAYAM MOOCs Online Programme, Soft Skills Training Programme, Naan Mudhalvan, Short Term Programme and Academic Training Programme periodically. This participation ensures teaching-learning pedagogy and inculcates innovative learning and introduces innovative teaching on par with other Higher Educational Institutions across nation. It also updates latest Teaching – learning trends in Higher Education.

D. Laks

**PRINCIPAL**

Principal
M.V. Muthiah Govt.
Arts College (W)
Dindigul - 1.

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி




## கல்லூரி ஆண்டு மலர்

**2021 - 2022**

**இதழ் - 56**

NAAC மற்றும் IQAC வழிகாட்டுதலின்படி நம் கல்லூரி முதல்வரின் ஒப்புதலோடு கீழ்வரும் குழுக்கள் மாணவிகளுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் அமைக்கப்பட்டு திறம்பட செயலாற்றி வருகிறது.

**I - NAAC Committee**

Dr.P.Sathiya Bama (Coordinator)

**II - IQAC**

Dr. K.M.Sumathi (Coordinator)

Dr.K.Ramasamy (Deputy Coordinator)

**III - Research and Development Cell**

Dr.T.Ramachandran (Coordinator)

**Advisory Board Members**

1. Dr.K.M.Sumathi
2. Dr.M.Rajaram
3. Dr.K.Ramasamy
4. Dr.Rajarajeswari
5. Dr.A.Subramani

**IV- Placement Cell**

Dr.K.Amutha (Coordinator)

**Placement Committee Members**

1. Dr.R.Subammal
2. Dr.J.J.Soundararaj
3. Dr.M.Sakthivel
4. Dr.L.Ruby Nirmala
5. Dr.M.Thangavel

(Guest Faculties of the Departments)

**V - Extension Activities - Outside the college campus**

Dr.M.Rajaram (Coordinator)

**Extension Activities Committee Members**

1. Dr.L.A.Uma Maheswari
2. Dr.C.Florence Annal
3. Dr.P.Gnanasoundari
4. Ms.P.Vimala Rani
5. Dr.M.Deva Kumar
6. Dr.P.Karthiyayini
7. Dr. S.Rajathi
8. Dr.S.Sivasankari
9. Dr. M.Ramesh
10. Dr.R.Muthu
11. Dr.N.Kumaresan
12. Dr.P.Senthil Ilango
13. Dr.S.Nagarajan

(Guest Faculties of the Departments)

**VI - MVM Journal of Research**

Dr.K.M.Sumathi (Editor)

Dr.P.Sathiya Bama (Associate Editor)

**Editorial Board Members**

1. Dr.M.Rajaram
2. Dr.C.Florence Annal
3. Dr.K.Ramasamy
4. Dr.A.Subramani

International Literature and Linguistics Journal of Tamil (ILLJT - Narumagai)

1. Dr.K.Naganandhini (Editor)
2. L.A.Uma Maheshwari (Associate Editor)

**VII - SWAYAM Committee**

Dr.B.Ashadevi (Coordinator)

**Members**

1. Dr.K.M.Sumathi
2. Dr.M.Dhanalakshmi
3. Dr.R.Vahitha
4. Dr.B.Murugeshwari
5. Dr.S.Sivasangari

**VIII - Health and Hygiene Committee**

Dr. R.Karthika Devi (Coordinator)

**Members**

1. Dr.P.Karthiyayini
2. Dr.R.Lakshmanan
3. Dr.S.Dhandapani
4. Dr.K.Periasamy
5. Dr.R.Muthu

**IX - Discipline Committee**

Dr. L.A.Uma Maheswari (Coordinator)

**Members**

1. Dr. K.M.Sumathi
2. Dr. R.Rajammal
3. Dr. J.P.Nikitha
4. Dr.V.S.Eswari
5. Dr.P.Gunasekaran
6. Ms.J.Sukanya
7. Dr.S.Nagarajan
8. Dr.M.Sakthivel

(Two Guest Faculty from every Department)

**X - Women Empowerment Cell**

Dr. K.Naganandhini (Coordinator)

**Members**

1. Dr.P.Sathiya Bama
2. Dr.P.Enola Arutchelvi Partvatha
3. Dr.K.M.Sumathi
4. Dr.L.A.Uma Maheswari
5. Dr.M.Dhana Lakshmi
6. Dr.K.Amutha

**கல்லூரி பேரவை பொறுப்பாளர்கள்**




**IQAC-Academic and Administrative Audit (AAA)**



# நூலக அறிக்கை

1. ரூபாய் ஒரு லட்சத்திற்கு (ரூ.1,00,000/-) 329 புத்தகங்கள் நூலகத்திற்கு வாங்கப்பட்டன.
2. 5823 மாணவியர்களும், 318 ஆசிரியர்களும் நேரிடையாக நூலகம் வந்து நூலகத்தை பயன்படுத்தி உள்ளனர்.
3. நூலகத்தில் N-List F-Resource Package வாங்கப்படுகிறது. 6000+Full Text Journals & 1.95 லட்சம் மின் புத்தகங்களும் மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் Remote Access மூலமாக பயன்படுத்த வசதி ஏற்படுத்தப்பட்டது.
4. 10577 நபர்கள் கல்லூரி நூலக Website-ஐ (www.librarymvmgac.wordpress.com & www.librarymvmgacdgl.wordpress.com) பயன்படுத்தி உள்ளார்கள்.
5. நூலகத்தில் மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்த இணைய வசதி உள்ளது (Wi fi facility + Wi fi LAN Connection)
6. ஒருகோடி ரூபாய் மதிப்பில், டிஜிட்டல் நூலகம் நிறுவப்பட்டது. (10 Computers, Tables, A/C,Printers and LAN connection)
7. Notice Board Display Service, Career Guidance service, Reference Service, Internet Service, and Research Assistance Service ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.
8. ஜூன் 2 2021 - "One Day National Webinar on Youtube live stream with Simple but Stupendous tools" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.
9. ஜூலை 31 2021 அன்று "One Day National Level Webinar on Open Access Resources and Employability Skills" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது
10. ஆகஸ்ட் 7, 2021 - International Webinar on Emerging Trends and Technologies in Libraries நடத்தப்பட்டது.
11. அக்டோபர் 5, 2021 - UG முதலாம் ஆண்டு மாணவியர்களுக்கு Online Orientation Programme நடத்தப்பட்டது.
12. அக்டோபர் 21, 22, 25, 26, 2021 ஆகிய நாட்களில் Intramural Live Seminar on Informa tion Skills for PG Final Year Students and M.Phil, Scholars, Science & Social Science என இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது.
13. நவம்பர் 27, 28, 2021 - International Virtual Conference on Contemporary Problems and Prospects of Libraries and Information Center என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.
14. ஜனவரி 31, 2022 - One Day "FDP on A - Z of Organizing online Programmes" நடத்தப்பட்டது.
15. மார்ச் 8, 2022 - கல்லூரி மாணவியர்களின் "கதைகேளு கதைகேளு" "Inter Collegiate online Story time") நடத்தப்பட்டது.
16. மார்ச் 19, 20, 2022 - ICSSR, New Delhi Sponsored Two Days National Webinar on "Free Online Tools for EC, Effective and Impactfull Research" நடத்தப்பட்டது.
17. மார்ச் 21, 22, 2022 புத்தக கண்காட்சி நடத்தப்பட்டது.
18. மார்ச் 27, 2022 - "Research colloquium" நடத்தப்பட்டது.
19. மார்ச் 30, 2022 TANSCHE Sponsored One day national Seminar on Librarians to Librarians 2.0 நடத்தப்பட்டது.
20. ஏப்ரல் 8, 9, 2022 புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது.
21. மே 2, 2022 - CLAM (Central Library association Meeting) நடத்தப்பட்டது.

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

**திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.**

**தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி**




# கல்லூரி ஆண்டு மலர்

**இதழ் - 55**

**2020 - 2021**

| பட்டயப்படிப்பு | | |
|---|---|---|
| பாடப்பிரிவு | முதல் சுழற்சி | இரண்டாம் சுழற்சி |
| கணினி பயன்பாட்டில் பட்டயப்படிப்பு | 100 % | |
| ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு | | |
| தமிழ் இலக்கியம் | 100 % | |
| ஆங்கில இலக்கியம் | 100 % | |
| கணினி அறிவியல் | 100 % | |

## கல்லூரி பொது நூலகம்

- ரூ.1,50,000/- மதிப்புள்ள 531 புத்தகங்கள் வாங்கப்பட்டன.
- N-LIST சேவை மூலம் 6000 + e-journals & 1.6 லட்சம் மின்னணு புத்தகங்கள் வழங்கப்படுகிறது.
- 6 Computers with Internet Connection மாணவியர் மற்றும் ஆசிரியர் பயன்பாட்டிற்கென உள்ளது.
- Question Bank Collection மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான Special Collection உள்ளது.
- 493 மாணவர்களும் 53 பேராசிரியர்களும் நூலகத்திற்கு வருகை தந்து அதை பயன்படுத்தி உள்ளனர்.
- UG மாணவர்களுக்கு 147 புத்தகங்களும் , PG மாணவர்களுக்கு 26 புத்தகங்களும், ஆராய்ச்சி மாணவர்களுக்கு 13 புத்தகங்களும் Issue செய்யப்பட்டன.
- 20 பயனாளர்கள் நூலகத்திலுள்ள கணினி மற்றும் இணையதள சேவையைப் பயன்படுத்தி உள்ளனர்.
- கல்லூரி நூலக வெப்சைட்டை (www.librarymvmgacwordpress.com), 3161 Online Visitors பயன்படுத்தி உள்ளனர்.
- நூலகத்திற்கு புதிதாக எட்டு கணினிகள் தரப்பட்டன.
- Librarian-cum-Circulation Cabin உண்டாக்கப்பட்டது.
- Organised a State Level Webinar on Research Metrics and Profile Management System on 13.3.2021
- Organised National Webinar on 11.6.2020
- Organised National Level e.workshop on 'Creating and Administering Google Forms' on 29.6.2020
- Conducted library Association Webinar on "N-LIST E-Resources" for Guest Lecturers on 19.4.2021
- Organised World Book Day Special Invited Lectures on 23.4.2021
- Organised 3 day State Level Webinar on 'Research Methodology for PG Students 6-8, May, 2021

- Organised a Webinar on 'CAS for Government Arts and Science College Librarians' on 20.5.2021
- Organised Inter Collegiate Statistical Online Quiz From 27.4.21 to 30.4.2021 with the Dept of Statistics
- Conducted online classes for PG Students
- Cycle 1 : Free and open Access E Resources (10.8.2020 - 25.8.2020)
  Cycle 2 : N-LIST E-Resources (Sep.2020)
  Cycle 3 : Reference Management (Sep. - Oct. 2020)

## கல்வி உதவித்தொகை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 664 மாணவியருக்கு 31,63,318/- ரூபாயும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 2083 மாணவியருக்கு 29,66,990/- ரூபாயும் தமிழ் வழி பயிலும் 428 மாணவியருக்கு தமிழ் வழி ஊக்கத் தொகை 3,85,200/- ரூபாயும், விடுதியிலுள்ள 14 மாணவியருக்கு விடுதி சிறப்பு கல்வி உதவித்தொகை 1,05,500/- ரூபாயும் மேலும் 32 மாணவியருக்கு சிறுபான்மையினர் உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

## ரூசா திட்டம்

இக்கல்வியாண்டில் முனைவர். அ.சுப்பிரமணி, உதவிப்பேராசிரியர் கணினி அறிவியல் துறை மற்றும் முனைவர் கு.பெரியசாமி, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை ஆகியோர் ரூசா திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர். இவ்வாண்டில் மூன்றாம் தவணையாகப் பெறப்பட்ட (ரூபாய் ஐம்பது லட்சம்) ரூசா திட்ட நிதியிலிருந்து மாணவியர்கள் நலனுக்காக மூன்று அதிநவீன வகுப்பறைகள், அதிநவீன நூலகத்திற்கு (Digital Library) தேவையான கணிப்பொறிகள், கல்லூரி காமராசர் கலையரங்கம், திறந்தவெளி கலையரங்கம் மற்றும் Prayer Hall - க்கு ஒலிஒளி அமைக்கத் தேவையான கருவிகள் வாங்கப்பட்டு, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

# IQAC அறிக்கை

இக்கல்வி ஆண்டிற்கான IQAC நிகழ்வுகள் இணைய வழியாக 28 ஏப்ரல் 2021 முதல் 31 மே 2021 வரை நடைபெற்றது. இக்கொரோனா காலக் கட்டத்தில் நம் கல்லூரி மாணவிகள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லா பணியாளர்கள் மட்டுமல்லாது பிற கல்லூரிகளில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் பங்கேற்பாளர்கள் பங்கேற்று பயன் பெறும் வகையில், 52 நிகழ்வுகளை IQAC ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே.எம்.சுமதி உதவி பேராசிரியர், ஆங்கிலத்துறை மற்றும் உதவி ஒருங்கிணைப்பாளர், முனைவர்.க.ராமசாமி நூலகர் அவர்களுடன் இணைந்து 13 துறைகளும், தங்களது பங்களிப்பை வழங்கினர். இதன் மூலம், மாணவிகள் தங்கள் தனித் திறமையை வளர்த்து கொண்டதுடன் தங்களது துறை சார்ந்த பலத் தலைப்புகளை தெளிவாகப் புரிந்து கொள்ள இந்நிகழ்வுகள் உறுதுணையாக இருந்தது. நிகழ்வுகள் பின்வருமாறு.

1. நூலக மன்ற விழா (Library Association) A Webinar on 'N-List E-Resources for Academic Proficiency and Research Efficiency' (19.04.2021)
2. World Book Day 2021 : Special Invited Lectures (23.04.2021)
3. One day Webinar on Moral Values for Students: Ethical Codes for Students during Pandemic Period (26.04.2021)
4. A One Day Webinar on Intellectual Property Rights (26.04.2021)
5. A Webinar on Protective Measures and Awareness of Sexual Harassment and Domestic Violence (27.04.2021)
6. Intercollegiate Online Quiz on Fundamentals of Statistics (27.04.2020 to 30.04.2021)
7. A National Level Awareness Programme on Online Courses (SWAYAM , MOOC, NPTEL) (30.04.2021)
8. A One-day Webinar on Kankal Pesum (கண்கள் பேசும்) (Eye Health Awareness Programme) (03.05.2021)
9. A One Day Webinar on Research Methodology for Teachers (05.05.2021)
10. International Webinar on Social Issues and Causes and Suggested Solutions (05.05.2021)
11. A One Day Webinar on Creating Awareness about Enterpreneurship Skills Among Students (05.05.2021)
12. Intercollegiate Competitions on Essay Writing, Short Story Writing, Verse Writing and Elocution for UG students (05.05.2021 - 13.05.2021)

13. A One Day Webinar on Attitude Matters (06.05.2021)
14. A three days State Level Online Seminar on PLANNING, EXECUTING AND WRITING PG FINAL YEAR PROJECT: A STEP-BY-STEP GUIDE (06.05.2021 - 08.05.2021)
15. A One Day National Webinar on Gender Equity (07.05.2021)
16. A One Day Webinar on Life Skills for Differently Abled (07.05.2021)
17. A Webinar on ICT Skills - IFHRMS (07.05.2021)
18. A One Day Webinar on Learing through Online Resources (08.05.2021)
19. A One Day Webinar on Yoga Awareness Programme (உடல்நலம், மனவளம் பேணும் யோகப் பயிற்சி) (08.05.2021)
20. A One Day Webinar on A Glimpse on Handmade Home Products (10.05.2021)
21. A Webinar on Values of Scribes (10.05.2021)
22. Webinar on Gender Sensitization (10.05.2021)
23. A One Day Webinar on An Awareness on Covid-19 Vaccination (11.05.2021)
24. A One Day Webinar on Soft skills (11.05.2021)
25. A One Day Webinar on Covid-19 Awareness (12.05.2021)
26. A One Day Webinar on An Awareness Programme on Women Trade and Economics Comfortability (12.05.2021)
27. A One Day Webinar on Managing Stress During Pandemic (12.05.2021)
28. கட்டுரைப் போட்டி, கவிதை போட்டி, சிறுகதை போட்டி, ஓவியப் போட்டி (12.05.2021)
29. A Webinar on Applying Bloom's Taxonomy in Teaching Learning (14.05.2021)
30. Historical Significance of the Celebration of Days - 8th and 18th May (15.05.2021)
31. A One Day Webinar on Professional Ethics (15.05.2021)
32. A One Day Webinar on A Critique on Nayaks Art & Architecture (15.05.2021)
33. A One Day Webinar on EBSB - Language Revitalization on lesser-known Languages and Culture (15.05.2021)
34. A One Day Webinar on Outcome - Based Assessment - Tools and Techniques (17.05.2021)
35. A One Day Webinar on Diet for Healthy Living (17.05.2021)
36. Constitutional Values (18.05.2021)
37. A One Day Webinar on Disaster Management (18.05.2021)
38. A One Day Webinar on Tools for Effective Communication (18.05.2021)
39. Webinar Series on Changing Dynamics of Business (Transition of Indian Rural Markets from Candle-light to Satellite Era) (18.05.2021)
40. A One Day Webinar on Ethics of Communication (19.05.2021)
41. A One DayWebinar on Activities and Benefits of Self-Help Group (19.05.2021)

42. A One Day International Webinar on Environmental Science - Current trends in water Treatment Technologies (20.05.2021)
43. One Day Webinar on CAS for Govt. Arts and Science College Librarians (20.05.2021)
44. A One Day Webinar on Ecosystem: The Circle of Life (Swachh Bharath) (21.05.2021)
45. A One Day Webinar on Cyber Crime (22.05.2021)
46. A One Day Webinar on Blood Donation, Organ Donation and AIDS Awareness (22.05.2021)
47. PTA Online Meet (22.05.2021)
48. A One Day National Level Webinar on Recent Trends in IT (23.05.2021)
49. Solar Energy Devices and Applications (26.05.2021)
50. Webinar on E-Value Chain - A Bridge between the Consumers and Marketers (26.05.2021)
51. Webinar on Election: The Citizens Outlook (27.05.2021)
52. Virtual Alumni Meet (31.05.2021).

இந்நிகழ்வுகள் அனைத்தும் Zoom மற்றும் Google Meet ஆகிய செயலிகளின் வழியாக சிறப்பாக நடைபெற்றது.

## NAAC கருத்தரங்கு

15.03.2021 அன்று மாணவிகளின் கற்றல்திறன் அதிகரிப்பதற்காக A Capacity Building Programme for Advanced Learners என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக எஸ்.டி.சுந்தரேசன் இ.ஆ.ப., சிறப்பு ஆளுனருக்கான அரசு செயலர், புதுச்சேரி அரசு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் புத்தகம் வாசித்தல், பொது அறிவு வளர்த்தல் போட்டித் தேர்வுக்கு தயார் செய்தல், ஆளுமைத் திறன் அதிகரிப்பு ஆகிய பண்புகள் குறித்து தெளிவுரை வழங்கினார். இக்கருத்தரங்கை NAAC பொறுப்பாளர் முனைவர். பா.சத்தியபாமா இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் விலங்கியல் துறை மற்றும் IQAC பொறுப்பாளர் முனைவர் K.M.சுமதி உதவிப் பேராசிரியர் ஆங்கிலத்துறை அவர்கள் இணைந்து நடத்தினர். மேலும் இக்கருத்தரங்கிற்கு NAAC STEERING COMITTEE குழுவினர் முனைவர்.அ.சாந்தஷீலா கணினி அறிவியல் துறை, முனைவர். மா.ஈத்தல் பாலின் விலங்கியல் துறை, முனைவர்.க.ராமசாமி நூலகர், மற்றும் பேராசிரியர் செல்வி.ப.முத்தமிழ் செல்வி அவர்கள் தத்தம்பணிகளை இணைந்து செய்தனர். இக்கருத்தரங்கில் அனைத்துத் துறை மாணவிகள் 200 பேர் பங்குபெற்று பயன் அடைந்தனர்.

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி




## கல்லூரி ஆண்டு மலர்

இதழ் - 54

2019 - 2020

## கல்லூரி பொது நூலகம்

- Rs.1,50,000/- மதிப்புள்ள 508 புத்தகங்கள் வாங்கப்பட்டன.
- நூலகத்தில் 18 Magazines மற்றும் 5 தினசரிகள் வாங்கப்படுகின்றன.
- NLIST என்ற சேவை மூலம் 6000+ Journals ரூ 1.6 லட்சம் மின்னணு புத்தகங்கள் வழங்கப்படுகிறது.
- 4 Computers with Internet connection - மாணவியர் மற்றும் ஆசிரியர் பயன்பாட்டிற்கென உள்ளது.
- Question Bank Collection மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான Special Collection உள்ளது.
- 19820 மாணவியர்களும் 329 பேராசிரியர்களும் நூலகத்திற்கு வருகை தந்து பயனடைந்துள்ளனர்.
- UG மாணவியர்களுக்கு 5188 புத்தகங்களும் PG மற்றும் M.Phil மாணவியருக்கு 1214 புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளது.
- 1065 மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் நூலகத்திலுள்ள கணிணி மற்றும் Internet சேவையை பயன்படுத்தி உள்ளனர்.
- Library website-ஐ (www.librarymvmgac.wordpress.com) , 3850 online visitors பயன்படுத்தி உள்ளனர்.
- தேசிய நூலகர் தினம் 20.08.2019 அன்று கொண்டாடப்பட்டது. Dr.P.செம்பியன்மாதேவி, இணை நூலகர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாணவியருக்கு 5 விதமான போட்டிகள் நடத்தப்பட்டன.

## கல்வி உதவித் தொகை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 631 மாணவியருக்கு 35,33,865/- ரூபாயும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 1936 மாணவியருக்கு 29,87,285/- ரூபாயும், தமிழ் வழி பயிலும் 395 மாணவியருக்கு தமிழ்வழி ஊக்கத் தொகை 3,55,500/- ரூபாயும், பல்கலைக்கழக அளவில் அதிக மதிப்பெண் பெற்ற இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளிலுள்ள இராணி மங்கம்மாள் கல்வி

உதவித் தொகை 96 மாணவியருக்கு 56,542/- ரூபாயும், விடுதியுள்ள 87 மாணவியருக்கு விடுதி சிறப்பு கல்வி உதவித்தொகை 6,56,500/- ரூபாயும், மேலும் 11 மாணவியருக்கு சிறுபான்மையினர் உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

## *ரூசா திட்டம்*

இக்கல்வியாண்டில் முனைவர் அ.சுப்பிரமணி, உதவிப் பேராசிரியர், கணிணி அறிவியல் துறை மற்றும் முனைவர் கு.பெரியசாமி, உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை ஆகியோர் ரூசா திட்ட ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர். இவ்வாண்டில் மூன்றாம் தவணையாகப் பெறப்பட்ட (ரூபாய் ஐம்பது லட்சம்) ரூசா திட்ட நிதியிலிருந்து மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான Wi-Fi இணையதள வசதிகள், அனைத்து துறைகளுக்கு தேவையான கணிப்பொறி, பிரிண்டர்கள், கலர் பிரிண்டர்கள், நகல் எடுப்பான்கள், UPS, மேலும் நூலகத்திற்கு தேவையான பார்கோடு ரீடர் மற்றும் ஸ்கேனர்கள், கல்லூரி வளாகத்திற்கு தேவையான சூரியசக்தி மின்விளக்குகள் வாங்கபட்டு, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

## *தேசிய தரச்சான்று ஒருங்கிணைப்பு குழு அறிக்கை*

இக்கல்வியாண்டில் NAAC ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் முனைவர் பா.சத்தியபாமா விலங்கியல் துறை, முனைவர் மா.ஈத்தல் பாலின் விலங்கியல் துறை, முனைவர் அ.சாந்த ஷீலா, கணினி அறிவியல் துறை, முனைவர் க.ராமசாமி நூலகர், திருமதி.ப.முத்தமிழ் செல்வி கணினி அறிவியல் துறை அவர்கள் அனைவரும் இணைந்து IIQA மற்றும் SSR - Self Study Report தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். NAAC அங்கீகாரம் பெறுவதற்கான வழிகாட்டு முறைகளின் படியும் 7 அளவு கோள்களின் படிவங்களின் படியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாடத்திட்டம் சார்ந்த பணிகள், கற்பித்தல், கற்றுக் கொள்ளும் முறைகள், பின்னூட்டம், ஆராய்ச்சி கட்டுரைகள், கருத்தரங்குகள், விரிவாக்க செயல்பாடுகள், கல்லூரி கட்டிட தகவல்கள், வகுப்பறைகள், நூலகம் சார்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் SSR அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

## *IQAC அறிக்கை*

நமது கல்லூரியில் 2019-2020-ம் கல்வியாண்டிற்கான IQAC (Internal Quality Assurance Cell) பொறுப்பாளர்களாக திருமதி.ஹ.சூரியபிரபா, உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை மற்றும் முனைவர் திருமதி.க.அமுதா, உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், வணிக மேலாண்மை நிர்வாகம் ஆகியோர் திறம்பட செயலாற்றினர். IQAC-யின் முக்கிய நிகழ்வாக Pedagogical Tools in Higher Education என்ற தலைப்பில் NAAC ஆதரவுடனான இருநாள் தேசிய கருத்தரங்கு 30.01.2020 மற்றும் 31.01.2020 ஆகிய தேதிகளில் ஆசிரியர்களுக்கு சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கை முனைவர் திருமதி.வினிதா சாகு, (Assistant Advisor, NAAC Bangaluru) அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களிலிருந்து சிறப்பு சொற்பொழிவாளர்கள் கலந்து கொண்டு கற்பித்தலின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து சிறப்புரையாற்றினர். தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## *இணையதளம் குழு அறிக்கை*

இக்கல்வியாண்டில் கல்லூரியின் இணையதளம் புதிப்பிக்கப்பட்டு பல மேம்பாடுகள் செய்யப்பட்டது. இணையதளத்தின் domain address புதிதாக https://mvmwgacdgl.ac.in என்ற முகவரியில் FNNET-India-வில் பதிவு செய்யப்பட்டது. இணைய தளம் Troy Software Inc என்ற நிறுவனத்தின் மூலமாக ரூ.17,700/- செலவில் புதுப்பிக்கப்பட்டு, ஆண்டு பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அனைத்து ஆசிரியர்களுக்கும் கல்லூரி domain சார்பாக gmail முகவரி உருவாக்கப்பட்டது. இணையதளம் domain முகவரி பதிவு செய்த வகையில் ரூ.2596/- செலவளிக்கப்பட்டது. இணையதளம் பதிவு செய்வதற்கும், புதுப்பித்தல் பணிக்கும் முன்னாள் மாணவியர் சங்கத்தில் இருந்து நிதி செலவளிக்கப்பட்டது. இப்பணிகளை இணையதளம் குழு உறுப்பினர்கள் முனைவர்.பா.சத்தியபாமா, விலங்கியல் துறை, முனைவர் ச.கிருஷ்ண்வேணி

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

**திண்டுக்கல் - 624 001**

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி

## கல்லூரி ஆண்டு மலர்






# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி
## திண்டுக்கல்
## 2018–2019ஆம் ஆண்டின் கல்லூரி ஆண்டறிக்கை

எம் கல்லூரியின் 53வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் தலைமையேற்றிருக்கும் எம் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.செ.லதா பூரணம் எம்.காம்.,எம்ஃபில்.,பிஎச்.டி., அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை புரிந்துள்ள முனைவர் திரு.இரா.பாஸ்கரன், எம்.எஸ்.சி.,எம்ஃபில்.,பிஎச்.டி., கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களே, கல்விப் புரவலர் அங்குவிலாஸ் நிறுவன உரிமையாளர்களே, எம் அழைப்பினை ஏற்று இங்கு வருகை புரிந்திருக்கும் அன்பர்களே, செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி நண்பர்களே, ஆசிரியப் பெருமக்களே, அலுவலக நண்பர்களே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன். 2018 – 2019 ஆம் கல்வி ஆண்டின் கல்லூரி ஆண்டறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.”

என்னும் குறளில் திருவள்ளுவர், ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்றும் மற்றவையெல்லாம் செல்வங்கள் அல்ல என்றும் கூறுகிறார். அத்தகைய சிறந்த செல்வமாகிய, மேன்மையான கல்வியை மாணவியருக்கு வழங்கும் பணியில் பங்கு பெற்றுள்ள எம் கல்லூரி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக கல்விப்பணியை செவ்வனே செய்து மாணவிகள் பலரையும் திறம்பட உருவாக்கி நல்லதொரு சமூகப் பங்களிப்பை செய்து வருகிறது.

திண்டுக்கல்லில் ஒப்பற்ற கல்லூரியாக இன்று இக்கல்லூரி திகழ, பின்புலமாய் இருந்த கொடை வள்ளல் அங்குவிலாஸ் குடும்பத்தினரின் அன்பும், தியாகமுமே மேலோங்கி நிற்கிறது. தொலைநோக்கு பார்வை கொண்டு, மகளிர் கல்வியை முதன்மையாகக் கருதி அன்று கனவுகளையும் நம்பிக்கைகளையும் விதைத்து அவர்கள் அளித்த 40 ஏக்கர் நிலமும், ஒரு இலட்ச ரூபாய் நிதியும், இக்கல்லூரி, பலரும் பயன்பெறும் பெரும் கல்வி மரமாக வளர்ந்து செழிக்க காரணமாய் இருந்திருக்கிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களில் உள்ள பெண்கள், உயர்கல்வி பெறும் வாய்ப்பை வழங்கி வருகிற எம் கல்லூரி, 1966 ஆம் ஆண்டு தமிழக அரசால் பழனி சாலையில் தற்போதுள்ள அரசு

மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதுமுக வகுப்பு, இளநிலை பட்டப்படிப்பில், வரலாறு மற்றும் வேதியியல் பாடப்பிரிவுகளை கொண்டு தொடங்கப்பட்டது. 1975ஆம் ஆண்டு அங்குவிலாஸ் குடும்பத்தினர் வழங்கிய நிலத்தில் கல்லூரிக்கான புதிய கட்டிடம் கட்டப்பட்டு, எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி எனப் பெயரிடப்பட்டு இவ்வளாகத்தில் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

ஏழை எளிய மாணவிகளுக்கு கல்வியாகிய செல்வத்தை கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக வழங்கி வரும் எம் கல்லூரி, மாணவிகளின் தேவையை அறிந்து அவர்கள் உயர்கல்வி பெறும் வகையில் முதுகலை, முதுஅறிவியல், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடங்கி கிராமப்புற மாணவிகளின் கனவை நனவாக்கி கொண்டிருக்கிறது.

எம் கல்லூரி 1966 முதல் 2002 முடிய 37 ஆண்டு காலம் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வந்தது. 2003ஆம் ஆண்டு முதல் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகிறது. 2007 ஆம் ஆண்டிலிருந்து, முதல் மற்றும் இரண்டாம் சுழற்சிகளைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல் சுழற்சியில் 13 இளநிலைப் பாடப்பிரிவுகளும், 11 முதுநிலை பாடப்பிரிவுகளும், 7 ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவுகளும், 1 ஆராய்ச்சித்துறை பாடப்பிரிவும், முதுநிலை கணினி பயன்பாட்டியல் பட்டய வகுப்பும், இரண்டாம் சுழற்சியில் 6 இளநிலை பாடப்பிரிவுகளும் கொண்டு, எம் கல்லூரி முதல்தரக் கல்லூரியாக (Grade A) விளங்குகிறது. தேசிய தர ஆய்வு மறுமதிப்பீட்டுக் குழுவினரால் ‘A’ தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

எம் கல்லூரி 1.07.2018லிருந்து முதல்வர் முனைவர்.திருமதி.செ.லதா பூரணம் அவர்களின் சீரிய தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. முதல்வரோடு இணைந்து முதல் சுழற்சியில், 70 பேராசிரியர்களும், 39 கௌரவ விரிவுரையாளர்களும், பெற்றோர் ஆசிரியர் கழக நிதி மூலம் 26 கௌரவ விரிவுரையாளர்களும், இரண்டாம் சுழற்சியில், 30 கௌரவ விரிவுரையாளர்களும், அலுவலகத்தில் 14 ஆசிரியரல்லா பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

இக்கல்வியாண்டில் முதல் சுழற்சியில் 2155 மாணவிகளும், இரண்டாம் சுழற்சியில் 716 மாணவிகளுமாக மொத்தம் 2871 மாணவிகள் பயில்கின்றனர்.

இக்கல்வியாண்டில் சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் சார்பாக அரசு கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ததில் நம் கல்லூரிக்கு 4 கோடியே 80 லட்சம் வழங்கப்பட்டு 22 வகுப்பறைகளும், 4 ஆய்வகங்களும் பொதுப் பணித்துறையால் கட்டப்பட்டு பணி நிறைவடைய உள்ளது.

இக்கல்வியாண்டு முதல் கணினி அறிவியல் துறை, ஆராய்ச்சி துறையாக அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் மூலம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது எம் கல்லூரிக்கு பெருமை சேர்ப்பதாகும். இக்கல்வியாண்டில் 6 மாணவிகள் கணினி அறிவியல் ஆராய்ச்சித்துறை பாடப்பிரிவில் சேர்ந்துள்ளனர்.

இக்கல்வியாண்டில் கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் திருமதி.அ.பெத்தாலெட்சுமி அவர்கள் பணி உயர்வு பெற்று வீரபாண்டி அரசு கலைக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார்.

வேதியியல் துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் திருமதி.தே.லட்சுமி அவர்கள் இக்கல்வியாண்டில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இவர் 1.6.2018 முதல் 30.06.2018 வரை நம் கல்லூரியின் பொறுப்பு முதல்வராகப் பணியாற்றி பின்னர், பணி உயர்வு பெற்று சீர்காழி அரசு கலைக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார்.

வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.திரு.ம.சுப்பிரமணி அவர்கள் பணி உயர்வு பெற்று திருவாடனை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இக்கல்வியாண்டில் விலங்கியல் துறை கௌரவ விரிவுரையாளர் (PTA) திருமதி.ம.சி.செல்வி அவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

நம் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, கணிதம், புவியியல், கணினி அறிவியல் துறையைச் சார்ந்த 8 பேராசிரியர்கள் ஆய்வு வழிகாட்டியாக செயல்பட்டு வருகின்றனர்.

முனைவர் திரு.தொ.இராமச்சந்திரன், உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், கணிதத்துறை அவர்களை வழிகாட்டியாக கொண்டு 3 மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

முனைவர் திரு.அ.சுப்பிரமணி, உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை அவர்களை வழிகாட்டியாக கொண்டு 2 மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இக்கல்வியாண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள், 75 ஆய்வுக் கட்டுரைகளை மாநில, தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் சமர்ப்பித்து வெளியிட்டு உள்ளனர்.

இக்கல்வியாண்டில் 7.03.2019 அன்று கணினி அறிவியல் துறை சார்பில் கல்லூரிகளுக்கு இடையேயான போட்டி TECHFEST - 19 நடத்தப்பட்டது. இதில் 10 கல்லூரிகளைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர். பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

2018 செப்டம்பர் மாதம் தியான்ஜின், சீனாவில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் "An Exploratory Analysis of Speckle Noise Removal Methods for Satelite Image" என்ற தலைப்பில் முனைவர்.திருமதி.அ.சாந்தஷீலா, உதவிப்பேராசிரியர், கணினி அறிவியல் துறை அவர்களின் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கல்வியாண்டில் கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் முனைவர் திரு.அ.சுப்பிரமணி, திருமதி.ஜெ.சுகன்யா மற்றும் செல்வி. ப.முத்தமிழ்செல்வி ஆகியோர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தாக்க பயிற்சியில் கலந்துகொண்டனர்.

எமது மூன்றாமாண்டு கணிதத்துறை மாணவி எஸ்.சத்தியவாணி மாவட்ட அளவிலான தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசாக ரூ.15,000 பெற்றுள்ளார். மேலும் இம்மாணவி அருட்பெருஞ்ஜோதி சன்மார்க்க சங்கம் சார்பில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலும் முதல் பரிசு பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

எமது வேதியியல் துறையின் மூன்றாமாண்டு மாணவிகள் ரா.பிரியதர்ஷினி மற்றும் எம்.பிரியங்கா ஆகியோர் நம் மாவட்டத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்குபெற்று பரிசுகளை வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

19.9.2018 மற்றும் 25.2.2019 ஆகிய நாட்களில் எமது கணிதத்துறை மாணவிகள் திண்டுக்கல் ஜி.டி.என்.கலைக்கல்லூரியில் நடைபெற்ற NET / SET தேர்விற்கான மாநில அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

25.01.2019 அன்று திண்டுக்கல் பார்வதீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "Machine Learning Using Azure Cloud" என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் பயிற்சி பட்டறையில் எமது கணினி அறிவியல்துறை மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

எமது விலங்கியல் துறை மாணவிகள் மேலூர் அரசு கலைக்கல்லூரி (25.01.19) மற்றும் கரூர் அரசு கலைக்கல்லூரியில் (08.02.19) நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குபெற்று பயனடைந்தனர்.

21.02.2019 அன்று Vijay Institue of Management கல்லூரியில் நடைபெற்ற 'Femina-19' போட்டிகளில் எமது மூன்றாமாண்டு இளநிலை வணிகவியல் மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

05.03.2019 அன்று காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் எமது கணினி அறிவியல் துறை மாணவிகள் கலந்து கொண்டு பரிசு பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

07.03.2019 அன்று எமது தாவர உயிர்த்தொழில் நுட்பவியல் துறை மாணவிகள் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை – திசு வளர்ப்பு ஆய்வுக்கூடத்தை பார்வையிட்டும் காளான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகளைப் பெற்றும் பயனடைந்தனர்.

16.3.2019 அன்று எம் கல்லூரியின் விலங்கியல் துறையும் திண்டுக்கல் புனித அந்தோணியார் கல்லூரியின் விலங்கியல் துறையும், செய்முறை பயிற்சிகள், மண்புழு உரம் தயாரிப்பு, சுருள் பாசி வளர்த்தல் குறித்த நிகழ்வுகள் நடத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ளது.

## மாணவியரின் கல்விசார் விரிவாக்க செயல்பாடுகள் :

01.02.2019 மற்றும் 02.02.2019 ஆகிய இருநாட்கள் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இயற்கை சாயம் தயாரிப்பு மற்றும் பூசுதல் தொடர்பான பயிற்சியில், பஞ்சாயத்து வாரியாக எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது கல்லூரியின் வேதியியல் துறை மற்றும் தாவர உயிர்த்தொழில்நுட்பவியல் துறை மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர். மாணவிகள் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையிலும், உடல்நலத்திற்கு கேடு விளைவிக்காத வகையிலும் இயற்கைச் சாயம் தயாரிப்பது எவ்வாறு என்பது பற்றி கற்று பயனடைந்தனர்.


வேதியியல் துறை


தாவர உயிர்த்தொழில் நுட்பவியல்துறை

**பணி நிறைவு செய்தவர்**



திருமதி.மு.ரேவதி
சிறப்புநிலை ஆய்வக
உதவியாளர்,
வேதியியல்துறை.